மணிச்சுடர் 1/2.2.2012





# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தினர் சிங்கப்பூரில் சமூகநலத் தொண்டு

சிங்கப்பூர், பிப். 1–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) கடந்த ஒரு வருடமாக பொதுமக்களுக்கான இலவச கணிதப் பயிலரங்கு மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது.

திருச்சி மாநகரில் 1951ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 61ஆண்டுகள் உயர்கல்வி வழங்குவதில் சரித்திரம் படைத்த இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூரில் சமூகநலத் தொண்டு புரிவதின் தொடர்ச்சியாக, சென்ற ஞாயிற்றுக்கிழமை 29–01–2012 அன்று விக்கி சாலையில் அமைந்துள்ள கப்லன் உயர் கல்வி கழகத்தின் இரண்டாம் தளத்தில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை "சுய முன்னேற்றம் அடைதல்" என்ற தலைப்பில் பொதுமக்களுக்கான இலவசப் பயிலரங்கு ஒன்றை மிகச்சிறப்பாக நடத்தியது.

சுமார் 100 பேர் கலந்து கொண்டு பயன்பெற்ற இப்பயிலரங்கை, 29 ஆண்டுகள் பயிலரங்குகள் நடத்துவதில் அனுபவம் பெற்ற இக்கல்லூரியின் முன்னாள் மாணவர், அப்துல் கரீம் நடத்தினார்.

சிங்கப்பூரில் கல்வி சார்ந்த சமூகநலத் தொண்டு புரிவதை பிரதான நோக்கமாக கொண்டுள்ள இச்சங்கம், வருகிற பிப்ரவரி மாதம் "HOW TO HELP YOUR CHILDREN TO SCORE BETTER GRADES IN MATHEMATICS?" (உங்கள் குழந்தைகள் கணிதத்தில் சிறந்த மதிப்பெண்கள் பெற எவ்வாறு உதவலாம்?) என்ற தலைப்பில் பெற்றோர்களுக்கான இலவசப் பயிலரங்கு ஒன்றை நடத்தவிருக்கிறது என்றும், அதன் விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும், சங்கத்தின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் எடுத்துரைத்தார். சமூக ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் நோக்கில், "குடும்பதின விழா" ஒன்றை நடத்துவதற்கான முயற்சிகளையும் இச்சங்கம் செய்து வருகிறது.

செய்தி: ஷிபானா சையத்